بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஜுமுஆ பேருரை**

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 28.11.2014 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

Summary of the Friday Sermon - 28, Nov 2014 (Tamil)

# Total Trust and Dependence on Allah

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:-

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள். உதவி கோருதல் தொடர்பாக நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், உண்மையில் உதவி செய்வதற்கான உரிமை அல்லாஹ்விற்கு மட்டுமே உள்ளது. அதாவது உங்களுக்கு உங்களுடைய பணிகள் முடிவடைவதற்கு ஏதேனும் தேவை இருக்கிறதென்றால் அது இறைவன் மட்டுமேயாவான். அவனுடைய இருப்பே உண்மையில் உங்களுக்கு உதவி செய்ய இயலும். உதவி செய்வதற்கான ஆற்றலைக் கொண்டுள்ளது. மேலும் உதவி செய்கின்றது. இந்த விஷயம் எவ்வளவு முக்கயிம் வாய்ந்ததென்றால், ஒரு உண்மையான நம்பிக்கையாளர் இதை எப்போது கண் முன் வைக்க வேண்டும். அந்த உதவி தனிப்பட்ட தேவையாக இருந்தாலும் சரியே. அல்லது உதவி கோருவதற்கான முயற்சி ஜமாஅத்தின் தேவைக்காக இருந்தாலும் சரியே. ஆனால் பொதுவாக நாம் காண்பது என்னவென்றால், இவ்வளவு முக்கியத்துவம் இருந்தும் மக்களுக்கு பொதுவாக இதன் பக்கம் கவனம் இருப்பதில்லை. எந்த அளவுக்கு கவனம் இருக்க வேண்டுமோ அது இருப்பதில்லை. நம்மில் அதிகமானோர் அல்லாஹ் அருள் செய்தான். என்னுடைய தேவை பூர்த்தியாகி விட்டது என்று கூறுகிறோம். ஆனால் ஆழமாக சென்று தன்னுடைய ஆன்மாவை ஆராய்ந்து பார்த்தால் தன்னுடைய தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கும் தன்னுடைய பணி முடிவடைவதற்கும், நிறைவடைவதற்கும் பல்வேறு வழிகளை காரணிகளாக கருதுகின்றனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் உதாரணங்களை கூறி பல்வேறு மக்கள் உதவி செய்தார்கள் என்று கருதுகின்ற அல்லது தனது கை வலிமையினால் அவன் தன்னுடைய நோக்கத்தை அடைந்தான் எனக் கருதும் பல சம்பங்களைக் கூறினார்கள். நான் என்னுடைய அனைத்து தேவைகளையும் நானே பூர்த்தி செய்து கொள்வேன் என மனிதன் கருதுகிறான். மேலும் தன்னுடைய சக்தி மற்றும் அறிவினால் அந்த தேவையை பூர்த்தி செய்தும் விடுகின்றான். பாருங்கள். நான் என்னுடைய திறமை மற்றும் சக்தி மற்றும் ஆற்றலினால் என்னுடைய பிரச்சனைகளை நானே தீர்த்தி விட்டேன் என்று கருதுகின்றான். நான் யாரிடமும் உதவி கேட்பதில்லை. அல்லது நான் யாரிடமும் உதவி பெறவில்லை என அவன் அகங்காரமும் தற்பெருமையும் கொள்கின்றான். ஆனால் சில முறை எப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகின்றதென்றால் அவனால் அவனுடைய தேவையை பூர்த்தி செய்ய இயலாது. மேலும் வெளி உதவியின் தேவை ஏற்படுகின்றது. அப்போது அவனது பார்வை தன்னுடைய நெருங்கியவர்கள் மற்றும் உறவினர்களின் பக்கம் செல்கின்றது. அவர்களிடமிருந்து உதவி பெறுகிறான்.

அவர்கள் அவனுக்கு உதவி செய்தும் விடுகின்றனர். அப்போது அவனுக்கு உறவும் நல்ல ஒன்றாகும் என்ற எண்ணம் ஏற்படுகிறது. இன்று என்னுடைய இந்த உறவினர்கள் இல்லை என்றால் நான் என்னுடைய தேவையை பூர்த்தி செய்திருக்க இயலாமல் போயிருக்கும் என எண்ணுகிறான். சில சமயம் எப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறதென்றால் மனிதனின் மனைவி மக்கள் தொடர்புடையர்கள் மற்றும் உறவினர்களால் அவனுக்கு பலனளிக்க இயலாமல் ஆகிவிடுகிறது. அல்லது செய்வதில்லை. அப்போது பார்வையை செலுத்தும் போது அவனது பார்வை நண்பர்களின் மீது படுகிறது. சந்திப்பவர்களின் மீது படுகிறது. எவர்களால் அவனுக்கு உதவி செய்ய இயலும் என அவன் எண்ணுகிறானோ அவர்களின் மீது படுகின்றது. அவர்களிடமிருந்து உதவி பெறுகிறான். அவர்கள் உதவி செய்தும் விடுகின்றனர். இக்கட்டான தருணத்தில் உதவி செய்யக்கூடிய நண்பர்களும் நல்லவர்களாவார்கள் எனக் கருதுகிறான். பிறகு எப்படிப்பட்ட ஒரு காலம் வருகிறதென்றால் நண்பர்களிடம் செல்லும் போது அவர்களும் தங்களது நிர்பந்தங்களை கூறுகின்றனர். அது ஆகுமான நிர்பந்தமாக இருந்தாலும் அல்லது தப்பிப்பதற்கான சாக்குப் போக்காக இருந்தாலும் சரியே. எவ்வாறிருப்பினும் அவர்கள் அவனுக்கு பலனளிப்பதில்லை. சில சமயம் எப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகின்றதென்றால் அந்தப் பணி நண்பர்களின் சக்திக்கு அப்பாற்பட்டதாகும். அவர்கள் அதை செய்ய இயலாது. அந்த பணி அவர்களின் சக்திக்கு அப்பாற்பட்டதாக ஆகிவிடும் போது மனிதன் சில அமைப்புகளின் பக்கம் கவனம் செலுத்துகின்றான். மேலும் அவன் எந்த இயக்கத்தோடு ஜமாஅத்தோடு தொடர்பு வைத்துள்ளானோ அவைகள் அவனுக்கு உதவி செய்கின்றன. அவனது பணி நடந்து விடும் போது அவனுடைய தேவை பூர்த்தியாகும் போது மாறாக, தேவைகள் பூர்த்தியாகிக் கொண்டிருக்கும் போது இந்த இயக்கம் அல்லது அமைப்பு அல்லது ஜமாஅத்துடன் தொடர்பு வைத்திருப்பதும் கூட நல்லதாகும் என்று கருதுகிறான். இதன் காரணத்தால் இயக்கத்தோடோ அல்லது ஜமாஅத்துடனோ தொடர்பும் அதிகமாகி விடுகின்றது. மாறாக, நான் சிலரை கண்டுள்ளேன். இன்ன நேரத்தில் ஜமாஅத்துடன் நான் ஜமாஅத்திடம் உதவி கேட்டேன். ஆனால் உதவி செய்யப்படவில்லை என அவர்களுக்கு தடுமாற்றமும் ஏற்படுகின்றது. எவ்வாறிருப்பினும் இது சரிதான். அதாவது சிலரின் விருப்பத்திற்கேற்ப வேலை நடந்தால் அல்லது அவர்களுக்கு உதவி கிடைத்தால் அதுவே அவர்களுடைய ஜமாஅத் தொடர்பை அதிகமாக்குவதற்கு காரணிகளாக ஆகின்றன.

பிறகு சில மனிதர்களின் வாழ்க்கையில் எப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் வருகிறதென்றால் அவர்களுடைய மனைவி மக்கள், உறவினர்கள், நண்பர்கள் எதுவரை என்றால் சில நிர்பந்தங்கள் மற்றும் கட்டுப்பாடுகளின் காரணத்தால் அமைப்பு மற்றும் ஜமாஅத்தும் எவ்வித உதவியும் செய்ய இயலாமல் போய் விடுகிறது. அவருக்கு எவ்வித பலனளிக்கவும் முடியாமல் ஆகிவிடுகின்றது. அப்போது அவன் தொடர்பு கொண்டுள்ள அரசாங்கத்திடம் செல்கின்றான். அரசாங்கம் அவனுக்கு உதவி செய்கின்றது. அப்போது அப்படிப்பட்ட மனிதர்களுக்கு அரசாங்கமே எல்லாமாக இருக்கின்றது. மற்ற அனைத்தும் பின் சென்று விடுகின்றன. ஆனால் எப்படிப்பட்ட ஒரு நேரமும் வருகிறதென்றால் அப்போது தன்னுடைய முயற்சிகளும், திட்டங்களும் பலனளிப்பதில்லை. உறவினர்களும் பலனளிப்பதில்லை. நண்பர்களும் பலனளிப்பத்தில்லை. சமுதாயமோ அல்லது அமைப்போ பலனளிப்பதில்லை. அரசாங்கமோ அல்லது மனித உரிமைகள் அமைப்புகளுமோ வெற்றிக்கான காரணமாக அமைவதில்லை. அல்லது அவர்களினால் வெற்றி வெறுவது சாத்தியமாக தெரிவதில்லை என்ற விஷயத்தையும் நிராகரித்து விட முடியாது. ஆனால் இந்த அனைத்திற்கு பிறகும் கூட ஒரு மனிதர் தன் நோக்கத்தை அடைந்து விட்டால், அவனுக்கு வெற்றி கிடைத்து விட்டால் எனக்கு ஏதேனும் மறைவான உதவியினால் தான் வெற்றி கிடைத்துள்ளது என கருதுகிறான். எந்த அளவுக்கு அவனுக்கு மறைவான உதவியின் மீது நம்பிக்கை இருக்குமோ அதே அளவு தன்னுடைய வெற்றியை இறைவன் புறமிருந்து வந்ததாக கருதுகிறான். எப்போது எல்லாம் இது போன்று ஆகியு, பணி நிகழ்ந்தும் விட்டால் ஏதேனும்

மறைவான இருப்பு எனக்கு உதவி செய்துள்ளது என மனிதன் கருதுகிறான். ஆனால் எவர்கள் இறைவனோடு வலுவான தொடர்வு கொள்வதில்லையோ அவர்கள் உலக காரணிகளை எல்லாமாக கருதுகின்றனர். மேலும் அவைகளின் பக்கமே அவர்களின் கவனம் இருக்கின்றது. இறைவன் பக்கம் பார்வை செல்வதில்லை. ஆனால் எப்போது இந்த அனைத்து வழிகளும் தோல்வியடைந்து விடுமோ பிறகு இறைவன் நினைவிற்கு வருகிறான். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்.

وَإِذَا مَسَّكُمُ ٱلضُّرُّ فِى ٱلْبَحْرِ ضَلَّ مَن تَدْعُونَ إِلَّآ إِيَّاهُ ۖ فَلَمَّا نَجَّىٰكُمْ إِلَى ٱلْبَرِّ
أَعْرَضْتُمْ ۚ وَكَانَ ٱلْإِنسَٰنُ كَفُورًا

அதாவது கடலில் உங்களுக்கு துன்பம் ஏற்படும் போது அவனையன்றி நீங்கள் எவர்களை அழைக்கின்றீர்களோ அவர்கள் உங்கள் உள்ளங்களிலிருந்து மறைந்து போய் விடுகின்றனர். பின்னர் அவன் உங்களை காப்பாற்றி நிலத்திற்கு கொண்டு வந்தால் நீங்கள் புறக்கணித்து விடுகின்றீர்கள். மனிதன் மிக அதிகமாக நன்றிகொன்றவனாக இருக்கின்றான். ஆக, புயலிலும், கஷ்டத்திலும் இறைவனை அழைக்க விடுகிறீர்கள் என இறைவன் கூறுகிறான். ஆனால் இரட்சிப்பு கிடைத்து விடும் போது பிறகு மறந்து விடுகிறீர்கள். இது மனித இயல்பாகும். அதாவது கஷ்டமான நேரத்தில் மிகவும் பணிவுடன் அல்லாஹ்வின் பக்கம் குனிகின்றனர். பிற உதவியாளர்களை மறந்து விடுகின்றனர். அவர்களுக்கு இந்த கஷ்டங்களிலிருந்து இரட்சிப்பு கிடைத்து விட்டால் அவர்கள் எப்போதும் இறைவனையே உதவிக்கான வழியாக கருதுவோம், அவனையே அழைப்போம் என அல்லாஹ்விடம் துஆ செய்கின்றனர். ஆனால் அபாயம் நீங்கிய உடனேயே உலகத்தின் பால் சாய்தலும், அகங்காரமும், பெருமையும் மீண்டும் அவர்களிடம் உருவாகி விடுகின்றன. ஆக, மனிதன் மிகவும் நன்றிகெட்டவனாகவும், சுயநலவாதியாகவும் இருக்கின்றான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சம்பவத்தை கூறியுள்ளார்கள். இறைவனை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் கஷ்டமான நேரத்தில் இவர்களின் வாயிலிருந்து இறைவனின் பெயர் வெளி வருகின்றது. அப்படிப்பட்ட மக்கள் தொடர்பான சம்பவமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் அன்னார் நிலநடுக்கம் தொடர்பாக முன்னறிவிப்பு செய்த போது நிலநடுக்கம் வந்தது. அப்போது லாஹூர் மெடிக்கல் காலேஜில் ஒரு மாணவன் தினமும் தன்னுடன் இருக்கக்கூடிய பிற மாணவர்களோடு இறை இருப்பு பற்றி விவாதித்து வந்தான். மாறாக, ஏளனம் செய்யம் அளவிற்கு சென்று விடுவான். நிலநடுக்கம் வந்த போது அவனின் இருந்த அறையின் மேற்கூரை விழுந்து விடும் என உணர்ந்த போது மேலும் எவ்வித சக்தியும் மேற்கூரை விழுவதிலிருந்து காப்பாற்ற முடியாது என்ற உறுதி ஏற்பட்ட போது அவன் இந்து குடும்பத்திலிருந்து வந்தவனாக இருந்ததால் அவனை அறியாமலேயே அவனுடைய வாயிலிருந்து ராம் ராம் என வந்தது. அடுத்த நாள் அவனுடைய நண்பர்கள் அவனிடம், நீயோ இறைவனை ஏற்றுக் கொள்ளமாட்டாய். பிறகு ஏன் நீ ராம் ராம் என கத்தினாய்? உனக்கு அப்போது என்ன ஆகி விட்டது? என வினவினர். இந்துக்களைப் பொருத்தவரை ராம் என்பது இறைவனுக்கு கூறப்படும். அதற்கு அவன், எனக்கு என்ன ஆகிவிட்டது என்றே தெரியவில்லை. என்னுடைய மூளை வேலை செய்யவில்லை என்று கூறினான். ஆக, எதுவரை மனிதனுக்கு பிற வழிகள் தென்படுகின்றனவோ அவற்றினால் பணிகள் நடக்கின்றன. அவன் அவைகளின் பக்கம் கவனம் செலுத்தி வருகின்றான். எப்போது எல்லா புறத்திலிருந்தும் அவநம்பிக்கை ஏற்பட்டுவிடுமோ, எந்த வெளிப்படையான காரணியும் வேலை செய்யவில்லையோ பிறகு இறைவனின் பக்கம் கவனம் ஏற்படுகின்றது. பிறகு அல்லாஹ்வை அழைக்கின்றான். அல்லாஹ்வைப் புகழ்கின்றான். அவன் முன் உருக்கத்தை வெளிப்படுத்துகின்றான்.

இதே போல் முதல் உலகப் போரின் ஒரு சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள். மாறாக, நான் இதை முன்பே கூறிவிட்டேன் என்றும் அன்னாரே

கூறினார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் நாத்திகரும் கூட இறைவனின் மீது நம்பிக்கை கொள்கிறார். சம்பவம் இப்படியாகும். 1918 ல் முதல் உ உலகப் போரின் போது ஜெர்மானியப் படை தனது அனைத்து சக்திகளையும் ஒன்று சேர்த்து கூட்டணி படையின் மீது தாக்குதல் நடத்தியது. அப்போது கூட்டணிப் படைக்கு எப்படிப்பட்ட நேரம் வந்ததென்றால் அவர்கள் தப்பிப்பதற்கான எந்த வழியும் தென்படவில்லை. ஏழு மைல் நீளமான பாதுகாப்பு வரிசை அழிக்கப்பட்டுவிட்டது. படையின் ஒரு பகுதி ஒரு பக்கத்திலிருந்தும், இன்னொரு பகுதி இன்னொரு பக்கத்திலிருந்தும் அழிந்து விட்டது. அதில் எந்த அளவிற்கு வெற்றிடம் உருவாகி விட்டதென்றால் ஜெர்மானியப் படைகள் அதற்கிடையே சென்று பின் பக்கத்திலிருந்து வந்து தாக்குதல் நடத்த இயன்றிருக்கும். மேலும் ஆங்கிலப் படைகளை அழித்திருக்க முடியும். அப்போது அந்த முன் வரிசைக்கு ஜெனரலாக இருந்தவர் கமாண்டர் இன் சீஃபிற்கு என்னிடம் போதுமான படை இல்லை. இப்படிப்பட்ட நிலைமை உருவாகி விட்டது. இந்த உடைந்த வரிசையை சரி செய்வது என்னுடைய சக்திக்கு அப்பாற்பட்டதாகும் என செய்தி அனுப்பினார். இது எப்படிப்பட்ட நேரமாக இருந்ததென்றால் இன்று நம்முடைய படை அழிந்து விடும். மேலும் இங்கிலாந்து மற்றும் பிரான்ஸின் பெயரும் கூட எஞ்சியிருக்காது என கருதினார்கள். கமாண்டரின் இந்த கஷ்ட கால செய்தி கிடைத்த நேரத்தில் பிரதம மந்திரி அமைச்சர்களோடு கூட்டத்தில் இருந்தார். முக்கிய ஆலோசனை நடந்து கொண்டிருந்தது. செய்தி சென்றடைந்த போது பிரதம மந்திரியால் என்ன தான் செய்திருக்க முடியும். ஒன்று இன்னும் அதிகமான படைகள் இருக்கவில்லை. அவ்வாறி இருந்தாலும் இவ்வளவு விரைவில் அந்த இடத்திற்கு படைகளை அனுப்பியிருக்கவும் முடியாது. அப்போது அவர்களின் மிகப் பெரிய தலைவரும் கூட இப்போது இந்த கஷ்டத்திலிருந்து இரட்சிப்பு வழங்கும் எந்த வெளிப்படையான உதவியும் கிடைக்காது என உணர்ந்தார். அப்போது அவர் தன்னுடைய நண்பர்களைப் பார்த்து நாம் இறைவனிடம் அவன் நமக்கு உதவி செய்ய துஆ செய்வோம் என கூறினார். ஆக, அனைவரும் முழங்கால் இட்டு குனிந்து நின்று துஆ செய்ய ஆரம்பித்தனர். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் இந்த துஆவின் விளைவாகவே அந்த அழிவிலிருந்து தப்பினார்கள் என்பதில் என்ன வியப்பு உள்ளது? ஆக, நான் ஓதிய வசனத்தில் இறைவன் கூறுகிறான். கஷ்டகாலத்தில் எல்லோரும் விட்டு விடுகின்றனர். அப்போது இறை இருப்பு மட்டுமே அவனோடு இருக்கின்றது. அதுவே பலனளிக்கிறது. மாறாக, அல்லாஹ் கூறுகிறான். அதாவது உருக்கத்தில் செய்யப்பட்ட துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. நாத்திகர் துஆ கேட்டாலும் சரியே. அல்லாஹ் நாத்திகர்களுக்கும் தனது இருப்பை நிரூபிப்பதற்காக சில சமயம் அடையாளங்களைக் காட்டுகின்றான். அவனுக்கு நற்பேறு இருக்குமானால் அந்த அடையாளமே அவனது மறுமையை சீரமைப்பதற்கான காரணியாக ஆகிவிடுகின்றது.

எவ்வாறிருப்பினும் கூற வந்ததன் நோக்கம் என்னவென்றால், உலகவாதிகளும் கூட கஷ்ட காலத்தில் எவ்வித உதவியும் தென்படாத போது இறைவனின் உதவியை பெற முயற்சிக்கின்றனர். திட்டம் தீட்டுவதும் இருக்கின்றது தான். உலகவாதிகள் அப்படிப்பட்ட காட்சிகளை காட்டும் போது எவர்களுடைய நிற்றலும், அமர்தலும் இறைவன் பக்கம் பார்ப்பதாக இருக்கிறது என்ற வாதம் செய்பவர்களுக்கு நம்முடைய பார்வை எப்போதும் இறைவன் பக்கம் இருக்க வேண்டும் என எந்த அளவுக்கு இதன் கவனம் செலுத்த வேண்டி தேவை உள்ளது. அல்லாய் இதற்காகவே நமக்கு இந்த துஆவை கற்றுக் தந்துள்ளான். இதை ஒவ்வொரு தொழுகையிலும், ஒவ்வொரு ரக்அத்திலும் படிக்குமாறு கட்டளை உள்ளது. அதன் மூலம் ஒருபோதும் இறைவன் புறமிருந்து நமது பார்வை விலகி விடக்கூடாது. ஒருபோதும் நாம் உலக உதவிகளின் பக்கம் பார்வை செலுத்தக்கூடாது. உலக உதவிகளின் பக்கம் முதலில் செல்லுங்கள். இறைவன் பக்கம் பிறகு என்று கருதாமல் இருக்க வேண்டும். ஆம். நிச்சயமாக அல்லாஹ் வெளிப்படையான திட்டமிடுங்கள் என்றும் கூறியுள்ளான். செய்யுங்கள். செய்யவும் வேண்டும். ஆனால் நம்பிக்கை இறைவன் மீது இருக்க வேண்டும். மாறாக, ஒவ்வொரு தொழுகையின்

ஒவ்வொரு ரக்அத்திலும் இந்த துஆவை கற்றுத் தந்து என் பக்கம், என் பக்கம் மட்டுமே உங்களின் பார்வை இருக்க வேண்டும் என இறைவன் நமக்கு கூறியுள்ளான். அந்த துஆ இதுவாகும். إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ஒரு நீண்ட ஹதீஸிலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எப்போது அடியான் إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ என்று கூறுகிறானோ அல்லாஹ் கூறுகிறான் இந்த வசனம் எனக்கும் என்னுடைய அடியானுக்கும் உடையதாகும். மேலும் என்னுடைய அடியான் என்னிடம் எதை வேண்டினாலும் நான் அதை வழங்குவேன். ஆக, இது முஸ்லிம்களின் நற்பேறு இல்லையா? அதாவது அல்லாஹ் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான உத்திரவாதத்தை வழங்குகின்றான். ஆனால்ப தூய்மையான முறையில் இறைவனின் பக்கம் நிரந்திர பார்வை இருக்கும் போது தான் இது நிரந்திர உத்திரவாதமாக இருக்கும். நான் கூறியது போல் கஷ்டமான நேரத்தில் சிக்கிய போது துஆ செய்வதாக இருக்கக்கூடாது. இதை நாத்திகரும் கூட செய்கிறார். அப்படிப்பட்ட துஆவாக இருக்கக்கூடாது. நாம் அஹ்மதிகளாவோம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாம் காலத்தின் இமாமின் கையில் பைஅத் செய்துள்ளோம். நாம் நம்முடைய ஒவ்வொரு சொல்லையும், செயலையும் இறைவனின் விருப்பத்திற்கேற்ப அமைப்போம் என உறுதிமொழி எடுத்துள்ளோம். நாம் கஷ்டத்திலும் நல்ல நிலையிலும் இறைவனிடமே உதவி கோருவோம் என்றும் அல்லாஹ் அல்லாதவற்றிலிருந்து விலகி இருப்போம் எனவும் உறுதி எடுத்துள்ளோம். நாம் நம்முடைய உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு எந்த அளவுக்கு إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ என்ற கருத்தை புரிய வேண்டிய தேவை இருக்கின்றது. நாம் மூழ்கிக் கொண்டிருக்கும் போது இறைவனை அழைக்கும் நாத்திகனைப் போல் இறைவனை அழைக்கக்கூடாது. நாம் உயர்வான மிஃராஜைப் பெறக்கூடிய மூஃமின்களைப் போன்று அல்லாஹ்வை வணங்குதல் மற்றும் அவனிடம் உதவி கோருதலின் அறிவைப் பெற்று அதன்படி செயல்பட வேண்டும். நமது அனைத்து சக்திகளும், நமது அனைத்து ஆற்றல்களும், நமது முழு துணையும் இறைவனுக்கு முன் குனிவதில் தான் இருக்கிறது என்பது அவர்களின் வாதமாமும்.

நாம் இதற்காக என்ன செய்ய வேண்டும். என்ன செய்து கொண்டிருகிறோம் என நம்மை ஆராய்ந்து பார்க்க வேண்டும். நமது இறை வணக்கங்கள் மற்றும் நம்முடைய இறைவனிடம் உதவி கோருதலின் தரம் இறைவன் கூறிய தரத்தை உடையதாக இருக்கிறதா என பார்க்க வேண்டும். அல்லது தினசரி 32 முறை கடமையான தொழுகைகளில் கிளியைப் போன்று إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ என்று மீண்டும் மீண்டும் கூறி பணி முடிவடைந்து விட்டது என அமர்ந்து விடுகின்றோமா என பார்க்க வேண்டும். நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாம் பலவீனர்களாவோம். மேலும் நமது எதிரி மிகவும் சக்தி வாய்ந்தவனாவான். நம்மிடம் எதிரியை எதிர் கொள்வதற்கு எவ்வித உலக சக்தியும் இல்லை. வசதி வாய்ப்புகளும் இல்லை. வேறு ஏதேனும் வழிமுறைகளும் இல்லை. இப்படிப்பட்ட நிலைமைகளில் நாம் இறைவன் முன் குனிவதைத் தவிர வேறு வழி ஏதும் இல்லை. மேலும் إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ன் ஆன்மாவைப் புரிந்தவாறு இறைவினின் சந்நிதியில் ஆகிவிட வேண்டும். இன்று உலகில் ஷய்த்தானிய தாக்குதல்கள் உச்சத்தை அடைந்துள்ளன. எல்லா இடங்களிலும் நமது வழிகளிலும் கஷ்டங்கள் உருவாக்கப்படுகின்றன. முஸ்லிம்கள் என்று கூறப்படக் கூடியவர்களும் நம்மை எதிர்ப்பதில் முன்னேறுகின்றனர். நாம் காலத்தின் இமாமை ஏன் ஏற்றுக் கொண்டோம் என்ற காரணத்தினால் அவ்வாறு செய்கின்றனர். மற்றவர்களும் பொறாமையில் முன்னேறுகின்றனர். அதாவது ஜமாஅத் உலகின் கவனத்தை தன் பக்கம் ஈர்க்கக்கூடியதாக இருக்கின்றது என்று பொறாமை கொள்கின்றனர். எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். எப்போது அல்லாஹ் எவருடைய உதவிக்காவது வந்து விடுகிறானோ பிறகு அவர் வெற்றி பெற்று விடுகிறார். உலகின் எந்த சக்தியாலும் அவருடைய வெற்றியை தடுக்க முடியாது. ஏனென்றால் இறைவனின் உதவி மிகவும் பரந்ததாகும். மேலும் அவனுடைய சக்திகள் முடிவுறாததாகும். அல்லாஹ்வின் இருப்பும் எல்லைக்குட்பட்டதல்ல. அவனுடைய பண்புகளும்

எல்லைக்குட்பட்டதல்ல. ஆக, அவன் முன் குனிவது ஒவ்வொரு அஹ்மதியின் பணியாகும். மேலும் அவனிடம் உதவி கோருவதே ஒவ்வொரு அஹ்மதியின் பணியாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள். நினைவில் கொள்ளுங்கள். இறைவன் தேவையற்றவனாவான். எப்போது வரை அதிகமாகவும், மீண்டும் மீண்டும் துஆ செய்யப்படுவதில்லையோ அவன் கருத்தில் கொள்வதில்லை.

ஆக, அதிகமாகவும், மீண்டும் மீண்டும் துஆ செய்வது நமது வெற்றியின் ரகசியமாகும். இதன் பக்கம் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. நமக்கு என்ன கஷ்டங்கள் எல்லாம் இருக்கின்றனவோ அது ஏதேனும் கூட்டத்தினரால் உருவாக்கப்பட்டதாக இருந்தாலும் சரி அல்லது அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டதாக இருந்தாலும் சரி அல்லது பொறாமையாளர் சமூகத்தில் குழப்பத்தை ஏற்படுத்த உருவாக்கி இருந்தாலும் சரி. அல்லது அதற்காக ஊடகங்களை உபயோகித்திருந்தாலும் சரி. அல்லது ஜமாஅத்தின் கண்ணியத்தின் மீது சேற்றை வீச நினைத்திருந்தாலும் இவர்கள் அனைவருக்கு எதிராகவும் அல்லாஹ் நமக்கு உதவி செய்வானாக என்று துஆ செய்ய வேண்டும். நாம் வேறு யாரிடமிருந்தும் உதவி கிடைக்கும் என்று எதிர் பார்ப்பதும் இல்லை. எதிர் பார்க்கவும் முடியாது. நமது பலவீனங்கள் அல்லாஹ்வின் அந்த உதவிகளை பின் தள்ளிவிட்டதென்றால் எங்கள் மீது கருணை காட்டியவாறு எங்களை மன்னிப்பாயாக. மேலும் உன்னுடைய கோபமான நிலையிலிருந்து எங்களை வெளியேற்றி உன்னுடைய அருள்களின் மழை எப்போதும் இருக்கின்றவர்களோடு எங்களை இணைப்பாயாக என நாம் துஆ செய்ய வேண்டும். மேலும் எவர்களுக்கு إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ பற்றிய உண்மையான அறிவு இருக்குமோ அவர்களோடு இணைப்பாயாக.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள். பாருங்கள். அல்லாஹ் إِيَّاكَ نَعْبُدُ அதாவது உன்னையே வணங்குகிறோம் என்ற போதனையை வழங்கியுள்ளான். மனிதன் தன்னுடைய சக்தியின் மீது நம்பிக்கை வைத்திருக்கலாம். மேலும் இறைவனிடமிருந்து தூரம் சென்றிருக்கலாம். எனவே தான் அத்தோடு إِيَّاكَ نَسْتَعِينُ அதாவது உன்னிடமே உதவியும் தேடுகிறோம் என்ற போதனையையும் வழங்கியுள்ளான். நான் செய்யக்கூடிய இந்த இறை வணக்கங்கள் என்னுடைய சக்தியினாலும் ஆற்றலினாலும் செய்கிறேன் என்று ஒருபோதும் கருதிவிடாதீர்கள். மாறாக, எதுவரை அல்லாஹ்வின் உதவி இருக்காதோ, அந்த தூய இறைவன் எதுவரை நல்வாய்ப்பினை வழங்க மாட்டானோ ஒன்றும் நடக்க முடியாது. ஆக, இந்த முக்கியமான உண்மையையும் எப்போதும் நம் முன் வைக்க வேண்டும். அல்லாஹ் நமக்கு இந்த முக்கியமான கருத்தை நம்முன் வைப்பதற்கும், இதைப் புரிவதற்கும் மேலும் இதன்படி செயல்படுவதற்கான நல்வாய்ப்பினையும் வழங்குவானாக.

மீண்டும் நான் துஆவிற்காக நினைவூட்டுகின்றேன். உலகின் நிலைமைகள் எந்த அளவுக்கு வேகமாக மாறுகின்றதென்றால் அல்லாஹ் இவற்றை ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான வழிவகையாக ஆக்குவானாக. அவை முன்னேற்றத்தில் தடையாக ஆகாதிருக்கட்டுமாக. மேலும் நாம் அல்லாஹ்வை வணங்கக்கூடிய மற்றும் அவனுடைய உதவியினால் அருள் பெறக்கூடிவர்களாவோமாக. பெற்றுக் கொண்டே செல்பவர்களாவோமாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 28.11.14
Summarized by Majlis Ansarullah Bharat
Tamil Translation : Moulavi. M.B. Tahir Ahmad
Published By Nazarath Nashr-O-Isha’ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516